

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மாநில மனித உரிமை ஆணையம்.**



# 53 இடம் பொருள் கலைஞர்



# மாநில மனித உரிமைகள் ஆணையம்

## மக்களின் உரிமை காத்த முன்னெடுப்பு!

சுவாமி ஆனந்த தீர்த்தர் என்ற காந்தியவாதி ஒருவர் இருந்தார். கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்ட அவர், தமிழ்நாட்டில் சாதி வன்கொடுமைகளுக்கு எதிராகப் போராடினார். அவர், 'அகில இந்திய அரிஜன சேவா சங்க' மண்டல அதிகாரியாக இருந்தபோது, மதுரை மேலூரில் நடைபெற்ற கொடுமை பற்றி, 1952 மார்ச் மாத 'சண்டே டைம்ஸ்' இதழில் கட்டுரையாக எழுதி இருக்கிறார்.

டீக்கடைகளிலே 'இரட்டைக் குவளை' முறை இருந்ததையும், தாழ்த்தப்பட்ட சாதி வாலிபர் ஒருவர், ஆதிக்க சாதிக்காரர்களுக்கான குவளையை எடுத்து, அதிலே தேநீர் கொடு என்று கேட்டதற்காக, அவர் தாக்கப்பட்டதையும் கண்ட ஆனந்த தீர்த்தர், அந்தக் கொடுமையை எதிர்த்து மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கிறார். அந்தக் கொடுமைக்கு விதிக்கப்பட்ட தண்டனை வெறும் பத்து ரூபாய் அபராதம்தான்.

இதனால் மனம் கொதித்துப்போன ஆனந்த தீர்த்தர், இரண்டு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த வாலிபர்களைத் தன்னோடு அழைத்துக் கொண்டு மற்றொரு கிராமத்துக்குச் சென்று, அங்கே தானே முன்னின்று தேநீர் கேட்கிறார். தர மறுத்ததோடு, அவர்களைத் தாக்குகிறார்கள் ஆதிக்க சாதியினர். அதன் பிறகு நடந்தவை அவரது சொற்களில்...

"தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாக்கப்பட்டது தெரிய வந்தால், தங்களுக்கு பாதிப்பு வரும் என்று கருதிய அந்த கிராமத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தோழர்கள், தங்கள் ஊர் கோவிலிலிருந்து சில பொருட்களைத் திருடிவிட்டார்கள் என்றும், அந்தப் பொருட்களை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கக்கன் அவர்களின் தந்தையார் பூசாரி கக்கனும், இன்னொரு உறவினரான எட்டி கக்கனும் 'அந்தப் பொருட்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வாலிபர்கள்தான் திருடினார்கள்' என்று சொல்லி அவற்றை கிராமத் தலைவரிடம் கொடுக்க வேண்டும் என்றும் அந்தக் கிராமத்தினர் வற்புறுத்தினார்கள். அவ்வாறு அந்தப் பொய் வழக்குக்கு அவர்கள் இருவரும் துணை போகாவிட்டால், கக்கனுடைய தந்தைக்கே ஆபத்து வரும் என்ற நிலை இருந்தது".

ஆனந்த தீர்த்தரின் கட்டுரையில் இடம்பெற்றிருக்கும் மேற்கண்ட வரிகளை, அண்ணல் அம்பேத்கர் தனது நூல் ஒன்றில் பதிவு செய்துள்ளார். அது, 'டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கரின் எழுத்துகளும் பேச்சுகளும்' என்ற புத்தகத்தில், ஐந்தாவது தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. நேர்மைக்கும் எளிமைக்கும் பெயர் பெற்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கக்கனின் தந்தைக்கே இந்த நிலை என்றால், சாமானியர்களின் நிலை பற்றிக் கேட்கவே வேண்டாம்.

### மனித உரிமைக் கருத்தரங்கு

1997 நவம்பர் 5 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில், 'மனித உரிமை' கருத்தரங்கைத் தொடங்கி வைத்து முத்தமிழறிஞர் கலைஞர் ஆற்றிய உரையில், "1947 ஆம் ஆண்டிலே நமக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டதென்றாலும் கூட, இன்னமும் மனித உரிமை முற்றிலுமாகக் கிடைக்கவில்லை. மனித சுதந்திரம் கிடைக்கவில்லை" என்று சொல்லி, ஆனந்த தீர்த்தரின் அனுபவத்தை உதாரணமாகக் காட்டினார். அதைச் சொல்லிவிட்டு, மனித உரிமை பாதுகாக்கப்படுவது தொடர்பான வரலாற்றையும் சொன்னார் கலைஞர்.

"1968 ஆம் ஆண்டு டெக்ரான் மாநகரத்தில் கூடிய ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமை மாநாடு தனது பிரகடனத்தில், 'மனித உரிமையையும், அடிப்படை உரிமைகளையும் பிரிக்க முடியாது. சமூக, பொருளாதார, கலாசார உரிமைகளை ஒருவர் அனுபவிக்காமல் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை அடைய முடியாது' என்று வலியுறுத்தியுள்ளது. அதைத் தொடர்ந்துதான் பல நாடுகளிலே மனித உரிமை ஆணையங்கள் உருவாயின.

> தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்ட உடனே, முதற்கட்டமாக அந்த ஆணையம் வேலூர், சேலம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு ஆகிய ஐந்து மாவட்டங்களுக்குச் சென்று, அந்தப் பகுதிகளில் இருந்த மாற்றுத் திறனாளிகள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை ஒன்றை அனுப்பியது. தவிர, பொதுமக்களிடமிருந்தும் புகார் மனுக்கள் பெறப்பட்டன. ஆணையம் அமைக்கப்பட்ட சில நாட்களிலேயே 726 மனுக்கள் பெறப்பட்டன குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, நம்முடைய இந்தியாவில் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று, 'தேசிய மனித உரிமை ஆணையம்', நீதிபதி ரெங்கநாத் மிஸ்ரா அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்டது. அந்த ஆணையத்தின் உறுப்பினர்களிலே ஒருவராக இருந்தவர் நம்முடைய தமிழக ஆளுநராக இன்றைக்கு இருக்கின்ற செல்வி பாத்திமா பீவி அவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது" என்றார்.

### மதிக்கப்படாத கடிதம்

அந்த தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடமிருந்து மாநில அரசுகளுக்கு 1993 டிசம்பர் 14 ஆம் தேதி கடிதம் ஒன்று வந்தது. அதில், காவல் நிலையங்களில் நடைபெறும் மரணங்கள், பாலியல் வன்கொடுமைகள் உள்ளிட்ட சம்பவங்கள் நடைபெற்றால், அதுதொடர்பான அறிக்கைகளை உடனடியாக தேசிய மனித உரிமை ஆணையத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

ஆனால் அப்படி அறிக்கைகள் அனுப்புவதற்கு முறையான நிர்வாகக் கட்டமைப்பு இல்லாமல் இருந்தது. அன்று, இந்தியாவில் 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' என்பவை ஏழெட்டு மாநிலங்களில்தான் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதைப் பற்றி கலைஞர் தன் உரையில் கூறும்போது, "தமிழ்நாட்டிலே 'மே' (MAY) என்ற அந்தச் சொல்லைப் பயன்படுத்தி அதை அமைக்காமலேயே இருந்துவிட்ட ஒரு சூழ்நிலை கடந்த ஆட்சியிலே இருந்தது" என்று சுட்டிக்காட்டினார்.

### கழக அரசின் கொள்கை

1996 ஆம் ஆண்டு மே 13 ஆம் தேதி தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றது. அடுத்து வந்த 23 ஆம் தேதி, அன்றைய ஆளுநர் டாக்டர் எம்.சென்னா ரெட்டி, கழக அரசின் மனித உரிமைக் கொள்கை குறித்து தனது உரையில் இப்படிக் குறிப்பிட்டார்:

"நமது மாநிலத்தில், குறிப்பாக புறநகர்ப் பகுதிகளில் சமூக விரோத ஆதிக்க சக்திகளால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டு வன்முறைக் குற்றங்கள் பெருகி, மக்களுக்குக் காவல்துறை மீதிருந்த நம்பிக்கை தளர்ந்துள்ள சூழலை இந்த அரசு மிகுந்த கவலையுடன் கவனித்து 'வேலியே பயிரை மேயும்' வேதனையைத் தடுத்து நிறுத்தவும் குற்றங்கள் புரிய 'அரசியல்' என்பது ஒரு பாதுகாப்பான இடம் என்ற அவலநிலையை அறவே போக்கவும், காவல்துறை என்பது மக்களுக்கு நல்லுறவுத் துறையாகவும், பாரபட்சமற்ற நடுநிலைத் துறையாகவும் மாற்றப்பட நடவடிக்கைகள் உரிய முறையில் எடுக்கப்படும். மனித உரிமைகள் மீறல் பற்றிய புகார்களை விசாரணை செய்ய 'மாநில மனித உரிமைகள் ஆணையம்' அமைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

அதன்படி, தமிழ்நாட்டில் இந்த ஆணையம் 1996 டிசம்பர் 20 அன்று அமைக்கப்பட்டது. தொடர்ந்து, 1997 ஏப்ரல் 17 அன்று, அந்த ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. 25 ஆண்டுகளுக்கும் மேலாக அந்த ஆணையம் மக்களின் உரிமைகளைக் காத்து வருகிறது. ஆம்... இறந்தும் மக்களைக் காக்கிறார் கலைஞர்..!

**...வலம் வருவோம்**

---

### இந்தோனேசிய இந்துயிசம்!

இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் நாடான இந்தோனேசியாவில் இந்துக்களும் சிறிய அளவில் இருக்கின்றனர். அவர்கள் கி.பி. 1-ஆம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து குடிபெயர்ந்தவர்கள். சமீபத்தில் இந்தோனேசியாவுக்குப் பயணம் செய்திருந்த, கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சமூகவியல் கொள்கைத் துறைப் பேராசிரியர் நீரஜ் கவுசால், இந்தோனேசியாவில் வசிக்கும் இந்துக்களின் வாழ்க்கைச் சூழல், இறை நம்பிக்கை, இந்துயிசம் குறித்து, ஆங்கில நாளேடு ஒன்றில் எழுதியுள்ளார்.

"சாதியின் பெயரிலான தீண்டாமைக் கொடுமைகள் அங்கு கொஞ்சம் கூட இல்லை. தாழ்த்தப்பட்ட சமூகம் என்ற ஒன்றும் அங்கே இல்லை. பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள கோயில்களில் இறைப்பணி ஆற்றுகின்றனர். ஆகமத் தடையெல்லாம் அங்கே கிடையாது. எல்லா கோயில்களிலும் சாதி, மத, பாலின பேதமின்றி எல்லோரும் வழிபடலாம். எந்தக் காலத்திலும் ஏற்றத்தாழ்வுகள் இருந்ததற்கான சான்றுகளே அங்கு இல்லை. 75 சதவிகிதத்துக்கும் அதிகமான திருமணங்களில், தங்களுக்கான இணையைத் தாங்களே தேர்வு செய்துகொள்கின்றனர்.

ஆணவப் படுகொலைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை. வேலை வாய்ப்புகளில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு, இந்திய சராசரியே 24 சதவிகிதம்தான். ஆனால், இந்தோனேசிய இந்துப் பெண்களில் 50 சதவிகிதத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புகளில் பங்களிப்பு செய்கின்றனர்" என்றெல்லாம் ஆச்சரியங்களை அடுக்கியிருக்கிறார் நீரஜ் கவுசால். இதையெல்லாம் உணர்வார்களா இந்திய இந்துத்துவ வாதிகள்..?

### :ப்ளாஷ்பேக்



### பெற்றோருடன் புகைப்படம்!



எழிலரசி விஜயகுமார்

1983 ஜனவரி 20 ஆம் தேதி, என் தந்தை வழக்கறிஞராகப் பதிவு செய்து அங்கீகரிக்கப்பட்ட காரணத்தால், தலைவர் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற குடும்பத்தாருடன் கோபாலபுரம் அழைத்துச் சென்றார். தலைவர் கலைஞர்தான் எனக்குப் பெயர் சூட்டினார். அப்போது கலைஞர் அவர்கள் திருமணம் ஒன்றுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த நிலையில், அவசரமாக எடுக்கப்பட்ட புகைப்படம். எந்தச் சூழ்நிலையிலும் தொண்டர்களை அரவணைக்கும் தலைவரின் பாச வெளிப்பாடு. கைக்குழந்தையாக நான். என் தாயார் பிச்சையம்மாளும் உடனுள்ளார்.

**-எழிலரசி விஜயகுமார், அம்மாபேட்டை, சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### அண்ணாவின் முதல் சிறைவாசம்

**1938 ஆம் ஆண்டு ஜூன் 10 ஆம் தேதி சென்னை ஆயிரம்விளக்கு பகுதியில் உள்ள கதீட்ரல் சாலையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் மக்களைத் தூண்டி விடும் வகையில் அண்ணா பேசினார் எனக் குற்றம்சாட்டப்பட்டு செப்டம்பர் 21-ஆம் தேதி கைது செய்யப்பட்டார். 4 மாத வெறுங்காவல் தண்டனை அண்ணாவுக்கு வழங்கப்பட்டது. அண்ணாவின் முதல் சிறைவாசம் இதுவே.**

---

### திராவிடத்தால் வாழ்கிறோம் 361




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131